# காலத்தில் வாழும் வாக்கியங்களை உருவாக்கிய முதலமைச்சர்!

**நேற்றைய தொடர்ச்சி**

**சாதாரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகமாகப் பேசுபவர் அல்ல. குறைவாகப் பேசுபவர்தான். பேச்சைவிட மௌனத்தை விரும்புகிறவர். பேச வேண்டிய நேரத்தில் பேசுகிறார். அவர் ஒரு வார்த்தை பேசினால் அது இந்தியாவையே அதிர வைப்பதாக இருக்கும். 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்று அவர் சொன்ன வார்த்தை ஹைகூ கவிதை மாதிரி இருந்தாலும் அச்சொல் இந்தியாவையே அதிரவைத்தது. காலத்தால் அழியாத சொற்களாக நிலைபெற்றுவிட்டது. "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்" என்பது இன்று தமிழ்ச் சமூகத்தில் பெரிய முழக்கமாக, வரலாற்று முழக்கமாக மாறிவிட்டது. அதே மாதிரி. "ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு என்றும் out of controlதான்" என்ற வாக்கியம் முக்கியமானது. அதை விடவும் முக்கியமானது. "தமிழ்நாட்டைத் தலைகுனியவிட மாட்டேன்" என்பது.**

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் அரசியல் சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்தை வழிநடத்துபவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக, தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்குத் தனது லட்சியமாக இருப்பது என்ன என்பதைப் பற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் என்ன சொல்லியிருக்கிறார்?

"இந்த நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்பதுதான் எனது லட்சியம். கொள்கை. இலக்கு."

"என்னுடைய இலக்குக்கு, திராவிட மாடல் என்று பெயர்."

"தமிழ்நாட்டில் எந்தத் தனிமனிதருக்கும் அரசாங்கத்திடம் வைக்க கோரிக்கை மனு இல்லாத ஒரு நிலையை உருவாக்க வேண்டும். அதுதான் என் லட்சியம்."

"ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக, தொழில் வளர்ச்சியாக மட்டுமே இருக்கக் கூடாது. சமுதாய வளர்ச்சியாகவும் இருக்க வேண்டும்."

"தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக மாற வேண்டும் என்பதே எனது ஆட்சியின் முழுமுதல் இலக்கு."

ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக தமிழ்நாட்டை எந்தப் பாதையில் வழிநடத்த விரும்புகிறேன். வழிநடத்துகிறேன் என்பதை அவருடைய வார்த்தைகளே வெளிப்படுத்திவிட்டது. அதோடு.

"இது சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி. சாமானியர்களின் ஆட்சி"

என்றும் சொல்லியிருக்கிறார். ஒரு ஆட்சி என்பது எளிய மக்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டும். அதுதான் நல்லாட்சிக்கான இலக்கணம்.

"மக்களின் அரசாக, மக்கள் நல அரசாக, மக்கள் விரும்பும் அரசாக, மக்கள் கவலைகளைப் போக்கும் அரசாக, மக்கள் கனவு காணும் அரசாக, திராவிட முன்னேற்றக் கழகம் அரசு செயல்படும்"

என்ற பிரகடனத்தை முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். இது வெறும் அறிவிப்பல்ல. வெற்று பேச்சல்ல. முதல்வரின் லட்சியம், கனவு. செயல் திட்டம்.

உலகில் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ். பண்டைய காலத்திலேயே தமிழர்கள் மொழி அறிவைப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் கல்வி அறிவைப் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனால்தான் நமக்கு அரிய இலக்கிய படைப்புகள் கிடைத்திருக்கிறது. தொடர்ந்து கல்வியைப் பெறுவதில் தமிழ்ச் சமூகம் முன்னோடியாக இருக்கிறது. மதம், கடவுள், நம்பிக்கை – மனுஸ்மிருதி, 18 புராணங்கள், 18 உபபுராணங்கள், 2 இதிகாசங்கள் (இராமாயணம், மகாபாரதம்) போன்ற கற்பிதங்களால் கல்வி பலருக்கும் மறுக்கப்பட்ட ஒன்றாக இருந்திருக்கிறது.

ஆனால், நீதிக்கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் என்று ஆட்சிக்கு வந்ததோ அதிலிருந்து முதன்மையான நோக்கமாக இருப்பது கல்வி மறுக்கப்பட்டவர்களுக்குக் கல்வியை வழங்குவது என்பதுதான். தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைக் கல்வி வரை தமிழ்நாட்டு மாணவ மாணவிகள் முதலிடம் பெற வேண்டும் என்பதில் அக்கறையுடன் செயல்பட்டுவருகிறார். கல்வியைப் பற்றி கூறும்போதெல்லாம், 'அறிவாயுதம் ஏந்துக' என்றும் 'படி படி படி' என்றும்தான் சொல்லிவருகிறார்.

"கல்வி மட்டும்தான் நம் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும்,

கல்வி மட்டும்தான் நமக்கு மதிப்பைத் தேடித் தரும்.



கல்வியால் பெறக்கூடிய பெருமை மட்டும்தான் எதனாலும் அழிக்க முடியாது.

"மனிதர்களை மதியுடையவர்களாக்குவதும் மாமேதைகளாக்குவதும் மனிதர்களாக்குவதும் கல்விதான்."

நான் எழுத்தாளனில்லை, கவிஞனில்லை என்று பல இடங்களில் பேசியிருக்கிறார். எழுதியிருக்கிறார். ஆனாலும், அவர் கல்வி, அரசு, பொருளாதாரம், சமூகம், மொழி, கொள்கைப் பற்றி பேசியிருப்பதும், எழுதியிருப்பதும், அவர் ஒரு தேர்ந்த எழுத்தாளர் என்பது தெரிகிறது. 'உங்களில் ஒருவன், உங்களோடு ஒருவன்' என்ற தன்வரலாற்று நூலை எழுதியிருக்கிறார். இருநூறு பக்கங்களில் எழுதுவதை விடவும் இரண்டு வரிகளில் எழுதுவதுதான் சவாலானது. அந்தச் சவாலில் மு.க.ஸ்டாலின் வெற்றிப் பெற்றிருக்கிறார்.

"அன்பு என்பது சாதி பார்க்காது, மதம் பார்க்காது, மொழி பார்க்காது, இனம் பார்க்காது, நிறம் பார்க்காது. பால்பேதம் பார்க்காது."

இந்த வாக்கியங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய உலகளாவிய பார்வையைக் காட்டுகிறது. சாதி, மதம், இனம், நாடு என்று மக்களிடையே பல வேற்றுமைகளை வெறுப்புணர்வுகளும் மேலோங்கியிருக்கிறது. அவை தேவையற்றவை. 'மனிதர்களாக இருப்போம். மனித மாண்பைக் காப்போம்' என்பதுதான் முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய வேண்டுதலாக இருக்கிறது. சகமனிதர்களிடம் அன்பாக இருப்பதில் என்ன பிரச்சினை? உண்மையான அன்பு எல்லா வேறுபாடுகளுக்கும் பிரிவினைகளுக்கும் இடமளிக்காது.

"மனிதர்கள் அனைவரும் சமம் என்பதுதான் சமத்துவம்.

யாரையும் வேற்றுமையாகப் பார்க்காதே என்பதுதான் சகோதரத்துவம்.

அனைவருடனும் சேர்ந்துவாழ் என்பதுதான் ஒற்றுமை.

ஏழைகளிடம் இரக்கம் காட்டு என்பதுதான் இரக்கம்.

அநீதிக்கு எதிராகக் குரல் கொடு என்பதுதான் நீதி.

மற்றவர்களுக்காக வாதாடு என்பதுதான் தியாகம்.

உன்னிடம் இருப்பதை இல்லாதவருக்குக் கொடு என்பது தான் பகிர்தல்."

இது வேதம் சொன்னதல்ல. யோகிகள், முனிவர்கள், தத்துவவாதிகள், சமய போதகர்கள் சொன்னதல்ல. முதல்வர் மு.க.ஸ்டாலின் சொன்னது. ஜென் தத்துவம்போல இருக்கிறது. புத்தர் சொன்னதுபோல் இருக்கிறது. மனிதர்கள் மீதான அன்பு யாருக்கு இருக்கிறதோ, எல்லையில்லா கருணை யாரிடம் இருக்கிறதோ, அவர்களிடம்தான் இது போன்ற சொற்களைப் பெற முடியும். 'சமூக நீதி நல விடுதிகள்' என்ற வாக்கியத்தையும், 'தூய்மைப் பணியாளர்கள்', 'அடிப்படைப் பணியாளர்கள்' என்ற வார்த்தைகளை முதல்வர்தான் உருவாக்கினார். மத்திய அரசு என்று காலம்காலமாகச் சொல்லப்பட்டு வந்ததை மாற்றி, 'ஒன்றிய அரசு' என்று சொல்லவைத்தவர். சமூகத்தில் புழக்கத்திற்குக் கொண்டுவந்தவர். 'திருநங்கை' என்ற வார்த்தையைக் கலைஞர் உருவாக்கியதுபோல. 'சமத்துவபுரம்' என்ற சொல்லையும் கலைஞர்தான் உருவாக்கினார்.

ஒரு சாமியார் சொன்னார், ஒரு கடவுள் சொன்னார் என்று சொன்னால், அதிலும் வெளிநாட்டினர் சொன்னார் என்று சொன்னால், அந்த வார்த்தைகளின் மீது சமூகத்திற்கு ஒரு மதிப்பு வருகிறது. அதையே ஒரு அரசியல்வாதி சொன்னால், அதை ஏற்க மறுக்கிறது. ஒரு அரசியல்வாதியாக நின்று இந்த வார்த்தைகளை முதல்வர் ஸ்டாலின் எழுதவில்லை. ஒரு மனிதனாக, சமூகத்தை நேசிக்கும் ஒரு மனிதனாக சொன்ன வார்த்தைகள். இந்த வார்த்தைகள் என்றும் சாகாது. "போலியான பெருமைகளால் யாரும் வளர முடியாது" என்று அவர் சொன்னதை இந்த இடத்தில் நினைவூட்டுவது முக்கியம். வாழ்க்கை அனுபவம்தான். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துச் சமூகத்திற்காகப் பேசவைக்கிறது. சகமனிதனின் மீது, சமூகத்தின் மீது பற்று இல்லாதவர்களால் சமூகம் எப்போதும் நினைவுக் கொள்ளும், கொண்டாடும் வார்த்தையை உருவாக்கிவிட முடியாது.

"மக்களுக்காக இருப்பவர்கள் நாங்கள்.

மக்களோடு இருப்பவர்கள் நாங்கள்.

மக்களுக்காகவே வாழ்பவர்கள் நாங்கள்."

மொழிப் பற்றி, கல்வி, அரசு நிர்வாகம், சமூகம், கட்சி, கொள்கை, விவசாயம், பொருளாதாரம், தொல்லியல், ஜனநாயகம், நாடு, மக்கள், மாணவர்களின் முன்னேற்றம் என்று பல துறைகள் பற்றியும் முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசியிருக்கிறார். எழுதியிருக்கிறார். அது கொள்கை பிரகடனமல்ல. அரசியல் கோஷமல்ல. தன்னுடைய கட்சியின் முழக்கமல்ல. எதிரிகளுக்கு விடுக்கப்பட்ட சவால்கள் அல்ல. அன்றாட அறிவிப்புகளுக்காக, அறிக்கைகளுக்காகப் பேசியவை அல்ல. எழுதியவை அல்ல. ஒவ்வொரு துறை சார்ந்தும் ஆழ்ந்த ஈடுபாடும் அக்கறையும் அந்தந்தத் துறைகளின் முக்கியத்துவம் அறிந்து, பேசப்பட்டவை. எழுதப்பட்டவை. காலத்தில் கரைந்து போகாத சொற்கள்.


**"எப்போதுமே இலக்குதான் முக்கியம். அதை அடைவதற்கு உழைப்புதான் முக்கியம். இலக்கும் உழைப்பும் ஒன்றுசேர்ந்தால் அவர்களை யாராலும் வெல்ல முடியாது."**

**இந்த வாக்கியம் எக்காலத்திற்கும் பொருந்தும். எல்லாச் சமூகத்திற்கும் பொருந்தும். ஒவ்வொரு மனிதனும் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது. அவனுடைய இலக்கு, உழைப்பு இரண்டும் இல்லாதவர்களால் வாழ்க்கையில் எந்த இலக்கையும் அடைய முடியாது. இந்தச் சொற்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினின் வாழ்க்கையிலிருந்து அவருடைய உழைப்பிலிருந்து உருவாகிவந்த சொற்கள். காலத்தில் நிற்கும் சொற்கள்.**

**பொதுவாக அரசியல்வாதிகள் மாற்றிமாற்றிப் பேசுவார்கள் என்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப பேசுவார்கள் என்றும் சூழ்நிலைக்கேற்ப கொள்கைகளை மாற்றிக்கொள்வார்கள்**

எழுத்தாளர்

**இமையம்**



**என்றும் சமூகத்தில் ஒரு நம்பிக்கை இருக்கிறது. அது முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய சொற்களுக்குப் பொருந்தாது. நீதி கட்சியின் கொள்கை என்னவோ, திராவிடர் கழகத்தின், தி.மு.க.வின் கொள்கை என்னவோ, அதுதான் முதல்வரின் கொள்கை. கட்சியின் அடிப்படை கொள்கைகளிலிருந்து இன்றுவரை அவர் ஒரு நூல் அளவுகூட மாறவில்லை. அதுதான் அவருடைய பலம். தி.மு.க.வின் பலம். முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய வாக்கியங்களும், எழுதிய வாக்கியங்களும் ஏன் இன்று திரும்பத்திரும்ப நினைவுகூரப்படுகின்றது. மேற்கோள் காட்டப்படுகின்றது என்றால், கொள்கை வழி வந்த பேச்சு, கொள்கை வழி வந்த எழுத்து என்பதால்தான்.**

**"நான் என் பலத்தை நம்பியே அரசியல் செய்ய நினைக்கிறேன்.**

**எனது பலம் எனது இலக்கில் இருக்கிறது."**

**இந்த வாக்கியம் அவர் யார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அவர் எப்படிப்பட்ட அரசியல்வாதி என்பதையும் காட்டுகிறது. இது ஒவ்வொரு அரசியல்வாதியும் பின்பற்ற வேண்டிய அரசியல் நெறி. பிறருடைய பலவீனத்தை நம்பி அரசியல் செய்கிறவர், நிஜமான அரசியல்வாதி அல்ல. சந்தர்ப்பவாதி. அரசியல் கொள்கையற்றவர்.**

"தீண்டாமை என்பது சமூகத்தில் எந்த வடிவத்திலும் இருக்கக் கூடாது. நம்முடைய வாழ்க்கை நெறிகளில் ஒன்றாகத் தீண்டாமை ஒழிப்பு இருக்க வேண்டும்."

"சாதி, மதம், பொருளாதாரம், சமூதாயச் சூழ்நிலை என்று எதுவுமே ஒருவர் கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது."

மேற்கண்ட வாக்கியங்களிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் 'சாதி' குறித்து என்ன நினைக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. சாதி வெறுப்பை, மத வெறுப்பை, சிறுபான்மையினர் வெறுப்பை ஆதரிக்காதவராக, மூடநம்பிக்கைகளை, பிற்போக்குத்தனங்களை ஆதரிக்காதவராக இருக்கிறார் என்பதைத்தான் அவருடைய பேச்சும் எழுத்தும் வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலினுடைய பொன்மொழிகள் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற, 'வாக்கியங்களைப் படிக்கும்போது, அவருடைய சொற்கள் மனித மாண்பை வெளிப்படுத்துவதாக, அறிவை, அறிவியல் பார்வையை முன்னிறுத்துவதாக, ஜனநாயகத்தை வலியுறுத்துவதாக, வரலாற்றை, மரபை முன்னிறுத்துவதாக இருக்கிறது.

"குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டும்."

முதல்வர் பேசிய, எழுதிய வாக்கியங்களில் தன்அகங்காரம் வெளிப்படவில்லை. தன்னடக்கம் வெளிப்படுகிறது. இந்தக் குணம் அவருக்கு இயல்பாக இருக்கிறது. இதுதான் முதல்வர் ஸ்டாலினுக்கான பெருமிதம். ஒரு மனிதனுடைய நடவடிக்கைகளை மட்டுமே வைத்துக்கொண்டு நல்லவர், கெட்டவர் என்று தீர்மானிக்க முடியாது. சம்பந்தப்பட்ட மனிதரின் பேச்சும், செயலும்தான் தீர்மானிக்கிறது.

" 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அன்பு நெறியும்,

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பண்பு நெறியும்

எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்."

"சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக்கொள்வேன்."

என்று எழுதியிருக்கிற முதல்வர் மு.க.ஸ்டாலினின் வார்த்தைகளுக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன. வரிகளில் தான் பின்பற்றும் வாழ்க்கை நெறியை, முறையைச் சொல்லியிருக்கிறார். இந்த வாழ்க்கை நெறிதான் முதல்வரின் மு.க. ஸ்டாலின் வாழ்க்கைப் பாதையாக, வாழ்க்கை நெறியாக இருக்கிறது. அதே நேரத்தில் அவர் யாரிடம் அதிகமாகக் கற்றிருக்கிறார் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

"கலைஞர்தான் எனக்கு உழைக்கக் கற்றுக்கொடுத்தார்.

போராட்டம் நடத்தக் கற்றுக்கொடுத்தார்.

அஞ்சாமல் சிறைக்குச் செல்ல கற்றுக்கொடுத்தார்.

சித்திரவதைக்குப் பயப்படக் கூடாது என்று கற்றுக்கொடுத்தார்."

முதல்வர் மு.க. ஸ்டாலினை இப்படி வரையறுக்கலாம். ஈரோடு போட்ட நேர்க்கோட்டுப் பாதையில் நடப்பவர். எல்லா விஷயங்களையும் ஈரோட்டின் கண்ணாடியின் வழியாகப் பார்ப்பவர். சாஸ்திர தடைகளுக்கு எதிரானவர். சமத்துவ வாழ்விற்காகப் போராடுபவர். சாதிய சமூகக் கட்டுமானங்களை உடைக்க விரும்புபவர். காலையாக இருந்தாலும், மாலையாக இருந்தாலும் காகிதப் பூ மணக்காது என்று சொல்பவர். "நம்முடைய உரிமைகளுக்காக, சுதந்திரத்திற்காக நாம்தான் போராட வேண்டும்" என்று கற்றுத் தருபவர். குழந்தைகளை, மணமக்களை வாழ்த்தும்போது, "தமிழ்போல் வாழ்க" என்று வாழ்த்துபவர். மற்றவர்களிடத்தில் கொள்கை முரண் கொள்வாரே தவிர, தனிமனித முரண் கொள்ள மாட்டார். அறிவிற் சிறந்தவர்களைக் கொண்டாட தவறாதவர். எளிமை, அரவணைப்பு, அனுசரிப்பு, விட்டுக்கொடுத்துப்போதல், சந்தர்ப்பவாத நிலைப்பாடு எடுக்காமை, எடுத்த முடிவில் உறுதியாக நிற்பது, தன்னம்பிக்கை தலைமைப்பண்பு போன்றவை அவரின் பண்புகளாகும்.

"புத்தகங்களின் மூலம்தான் அறிவுப் புரட்சி ஏற்பட வேண்டும்" என்று சொன்னவர்.

**தத்துவ மேதைகள், அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சமூக விஞ்ஞானிகள் சொன்ன வார்த்தைகள்தான் சமூகத்தால் மீண்டும்மீண்டும் பேசப்பட்டு வந்தன. மேற்கோள் கட்டப்பட்டு வந்தன. அந்த வரிசையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிய, எழுதிய வாக்கியங்களும் இனி சமூகத்தால் மீண்டும்மீண்டும் நினைவுகூரப்படும். மேற்கோள் காட்டப்படும். அவருடைய வார்த்தைகளுக்கு அழிவில்லை. காலத்தால் அழிந்துபோகாத வாக்கியங்களை உருவாக்கியவர் பட்டியலில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் பெயரும் இடம்பெற்றுவிட்டது. நிலைபெற்றுவிட்டது.**

---

### பீடித் தொழில் நசிந்துவிடாமல் இருக்க

# எளிமைப்படுத்தப்பட்ட சட்ட இணக்க வகையை உருவாக்க வேண்டும்!

## மக்களவையில் கலால் வரி திருத்த மசோதா விவாதத்தில் கதிர் ஆனந்த் உரை!

புதுடெல்லி, டிச.8- நாடாளுமன்ற மக்களவையில் மத்திய கலால் வரி (திருத்தம்) மசோதா, 2025 குறித்த விவாதத்தில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் பங்கேற்று ஆற்றிய உரை விவரம் வருமாறு:-

இந்த மத்திய கலால் வரி திருத்த மசோதாவில் உள்ள சில சீர்திருத்தங்கள் தொழில்நுட்ப ரீதியாக அவசியமானவை மற்றும் விதிகள் மிகவும் நல்லவை என்றாலும், தொழில்நுட்ப அடிப்படையில் சில தெளிவுபடுத்தல்களைக் கோர விரும்பும் சில பகுதிகள் உள்ளன.

ஒரு நேர்மறையான குறிப்பில், பழைய கலால் வரி விதிகளைப் புதுப்பிப்பது வரவேற்கத்தக்கது. மத்திய கலால் சட்டம் GST சகாப்தத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்பே வரைவு செய்யப்பட்டது. இந்த மசோதா அந்த காலாவதியான பிரிவுகளை நீக்கி, நடைமுறைகளை நவீன அமைப்புடன் ஒருங்கிணைக்கிறது. டிஜிட்டல் தாக்கல் மற்றும் டிஜிட்டல் பதிவு வைத்தல் நிச்சயமாக வரவேற்கத்தக்கவை.

உறுதியான காலக்கெடுவை அறிமுகப்படுத்துவதும் இந்த மசோதாவின் ஒரு நேர்மறையான அம்சமாகும்.

**மசோதாவில் தெளிவற்ற சொற்றொடர்கள்!**

இருப்பினும், தெளிவுபடுத்த வேண்டிய பல பாதிப்பு தரவல்ல பல சிக்கலான குழப்பமான பகுதிகள் உள்ளன. மசோதாவில் தெளிவற்ற மற்றும் புரிந்து கொள்ள முடியாத சொற்றொடர்கள் உள்ளன. உதாரணமாக, இது எல்லைகளை வரையறுக்காமல் "வேறு எந்தப் பொருட்களும் மற்றும் "அறிவிக்கப்பட்டிருக்கலாம்" மற்றும் "எந்த செயல்முறையும் மற்றும் "பரிந்துரைக்கப்படலாம்" போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறது.

ஒரு உதாரணம் தருகிறேன். எனது சொந்த குக்கிராமத்தில் ஆம்பூர் அல்லது வாணியம்பாடியில் உள்ள ஒரு சிறிய பீடி பிரிவைக் கவனியுங்கள். இன்று எந்த செயல்முறைகள் கலால் வரியை ஈர்க்கின்றன என்பதை அவர்கள் சரியாக அறிவார்கள். ஆனால் நாளை அரசாங்கம் புகையிலை இலைகளை வெட்டுவது அல்லது புகையிலையை சூடேற்றுவது கூட கலால் வரியை ஈர்க்கும் ஒரு புதிய செயல்முறை என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டால், அவர்களுக்கு எந்த பாதுகாப்பும் இருக்காது,



ஏனெனில் சட்டமே முடிவற்றது. இது நிச்சயமற்ற தன்மையை உருவாக்குகிறது மற்றும் தொழில்நுட்ப ரீதியாக ஆபத்தானது. நிதியமைச்சரிடம் விளக்கம் கேட்கும் குறைபாடுகளில் இதுவும் ஒன்று.

நிர்வாகத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. பல முக்கிய வரி நிபந்தனைகள் சட்டத்திலிருந்து விதிகள் மற்றும் அறிவிப்புகளுக்கு மாற்றப்படுகின்றன. இது பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை பலவீனப்படுத்துகிறது. வரி விகிதம் அல்லது விலக்கு நிபந்தனைகள், பீடி அலகுகள் போன்ற அறிவிப்புகளுக்கு விடப்பட்டால், திடீரென ஏற்படும் நள்ளிரவு மாற்றம் வரிகளை உயர்த்தலாம், விலக்குகளை ரத்து செய்யலாம் அல்லது புதிய இணைக்கக் கலால் வரி விதிக்கலாம் இவை அனைத்தும் பாராளுமன்றத்தில் எந்த விவாதமும் இல்லாமல். இதனால் லட்சக்கணக்கான ஏழைப் பெண்களால் நடத்தப்படும் ஒரு தொழிலுக்கு கடும் பாதிப்பு ஏற்படும். பல இது ஒரு கணிக்க முடியாத மற்றும் ஆபத்தான நடவடிக்கை.

பின்னோக்கிப் பார்க்கும் விளைவு போன்ற பிற சிக்கல்களும் உள்ளன.

**பொருளாதார தண்டனை!**

ஒரு பீடி உற்பத்தியாளரிடம் அவர்களின் மதிப்பீட்டு முறை தற்போது ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று கூறப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். மசோதா இப்போது துறையின் முந்தைய கருத்து சட்டப்பூர்வமாக பின்னோக்கிச் செல்லுபடியாகும் என்று கூறினால், சிறிய பிரிவு திடீரென்று பல ஆண்டுகள் வரி செலுத்துதல், ஐந்து ஆண்டுகள் அபராதம் மற்றும் வட்டி கூட கோரும் அறிவிப்புகளைப் பெறலாம். இது வரி நிர்வாகம் அல்ல; இது பொருளாதார தண்டனை.

சிறிய தொழில் அலகுகள், குறிப்பாக பீடி அலகுகள் மீதான சுமைகள் சுமத்துவது மற்றொரு கவலை.

இந்த மசோதா நடைமுறைகளை எளிதாக்காமல் அறிக்கையிடல் கடமைகள் மற்றும் தணிக்கை அணுகலை அதிகரிக்கிறது. இங்கே நான் பீடி தொழில் பற்றி மட்டுமே பேசுகிறேன். ஒரு சிறிய கிடங்கில் இருந்து இயங்கும் பீடிரோலிங் யூனிட்டில் கணக்காளர்கள் இல்லை, கணினிகள் இல்லை, ஜிஎஸ்டி ஆலோசகர்கள் இல்லை. மசோதா டிஜிட்டல் பதிவேடுகள், மாதாந்திர அறிக்கைகள் மற்றும் விரிவான பங்கு சமரசத்தை கட்டாயப்படுத்தினால், இந்த சிறிய அலகுகளுக்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன: மூடல் அல்லது அவர்கள் அறியாமலேயே சட்டத்தை மீறுதல். இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்கள், பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

ஜிஎஸ்டி சொற்கள் பயன்பாட்டில் தவறான சீரமைப்பு பிரச்சினையும் உள்ளது. உற்பத்தி, மதிப்பீடு மற்றும் நீக்கம் ஆகியவற்றின் வரையறைகள் ஜிஎஸ்டி விதிகளுடன் ஒத்துப்போக வேண்டும். ஆனால் இந்த மசோதா வெவ்வேறு மொழியைப் பயன்படுத்துகிறது, இது ஒரு மோதலை உருவாக்குகிறது. ஜிஎஸ்டியின் கீழ், பீடிகளை உருட்டுவது பொருட்களின் விநியோகமாகக் கருதப்படுகிறது; கலால் வரியின் கீழ், அதை வித்தியாசமாக வகைப்படுத்தலாம். இந்த பொருத்தமின்மை ஒவ்வொரு சிறிய பீடி அலகும் நீதி மன்றங்களில் விலையுயர்ந்த வகைப்பாடு தகராறுகளுக்குள் தள்ளும். இது அவர்களால் தாங்க முடியாத ஒரு சுமையாகும்.

மேலும், இந்த மசோதா அதிகாரத்தின் ஆய்வு அதிகாரங்களை வலுப்படுத்துகிறது. இது சோதனைகள் மற்றும் பறிமுதல்களை நடத்துவதற்கான அதிகாரத்தை விரிவுபடுத்துகிறது, ஆனால் தகராறு தீர்வை மேம்படுத்த எதுவும் செய்யவில்லை. ஒரு பீடி அலகு சரக்குகளை குறைவாக மதிப்பிட்டுள்ளதாக ஒரு அதிகாரி சந்தேகித்தால், அவர் உடனடியாக பொருட்களை பறிமுதல் செய்யலாம், ஆனால் மேல்முறையீடுகள் இன்னும் பல ஆண்டுகள் ஆகும். சிறிய அலகுகள் நீண்டகால சட்டப் போராட்டங்களில் இருந்து தப்பிக்க முடியாது.

தமிழ்நாட்டில், பல பெண்கள் பீடி உற்பத்தியைச் சார்ந்துள்ளனர். ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தங்கள் குடும்பங்களை ஆதரிக்க பீடிகளை உருட்டுகிறார்கள். அவர்களில் விதவைகள், ஒற்றைத் தாய்மார்கள், வயதான பெண்கள் மற்றும் வீட்டு வேலை செய்பவர்கள் அடங்குவர். இணக்கத் தேவைகளில் திடீர் அதிகரிப்பு, மதிப்பீட்டு தகராறுகள், வலிப்புத்தாக்கங்கள் அல்லது பின்னோக்கி கோரிக்கைகள் இந்த முழு பாரம்பரியத் தொழிலையும் அழித்துவிடும்.

**பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினை!**

இது வரி பிரச்சினை அல்ல. இது தமிழ்நாட்டில் பெண்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. கிராமப்புற பொருளாதாரம் தொடர்பான பிரச்சினை. இந்த சீர்திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். தீங்கு விளைவிக்கும் பிரிவுகளை நீக்குவதை நான் ஆதரிக்கிறேன். நிதி யமைச்சரை நான் ஆதரிக்கிறேன். கலால் சட்டங்களை நவீனமயமாக்கும் நோக்கத்தை நான் ஆதரிக்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் குழப்பத்தை உருவாக்கும் மற்றும் சிறு தொழில்துறையை சுமையாக்கும் மற்றும் குறிப்பாக பீடி தொழிலாளர்களை அச்சுறுத்தும் விதிகளை நான் கடுமையாக எதிர்க்கிறேன். பீடி தொழிலை புதிய இணக்க சுமைகளிலிருந்து பாதுகாக்கவும். தெளிவற்ற மற்றும் வரம்பற்ற ஒதுக்கப்பட்டவற்றை அகற்றவும்

பீடி தொழிலில் அதிகாரங்கள். பீடி தொழில் தண்டிக்கப்படாமல் இருக்க, பின்னோக்கி விளைவுகள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும். சர்ச்சைகளைத் தவிர்க்க GST உடன் கலால் வரையறைகளை இணைக்கவும். சிறிய அலகுகளுக்கு, குறிப்பாக பீடி அலகுகளுக்கு எளிமைப்படுத்தப்பட்ட சட்ட இணக்க வகையை உருவாக்கவும் வேண்டும்.

**பீடித் தொழிலாளர்களின் குடும்பங்களை ஆதரிப்பீர்!**

இந்த மாற்றங்களின் மூலம், இந்த மசோதாவை நியாயமானதாகவும், நவீனமாகவும், மக்களுக்கு ஏற்றதாகவும் மாற்ற முடியும். அவர்கள் இல்லாமல், தமிழ்நாட்டில் பெண்கள் இயக்கப்படும் மிகப்பெரிய தொழில்களில் ஒன்றை அது அழிக்கக்கூடும்.

இறுதியாக, கொரோனா காலத்திலும் கூட, பீடித் தொழிலாளர்கள் பீடி உற்பத்தியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்கள் குடும்பங்களை ஆதரித்தனர். அந்தக் கடினமான காலங்களிலும் கூட, அத்தகைய தொழிலாளர்களின் பல குடும்பங்கள் இந்த பீடி உற்பத்தித் தொழிலால் ஆதரிக்கப்பட்டன. பல ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் பீடித் தொழிலைச் சார்ந்து உள்ளனர்.

பீடியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கு விளைவிக்கும் நோய்களைப் பற்றி நாம் பார்க்கிறோம். ஆனால் அதே நேரத்தில், பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை பீடி தயாரிப்பையே முழுமையாக நம்பியுள்ளன. மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யும் போது, அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கத்தி எவ்வளவு கூர்மையானது என்பதைப் பார்க்கிறோம். அந்தக் கூர்மையான கத்தியால் எத்தனை பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நோய்களிலிருந்து குணப்படுத்தப்படு கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம்.

எனவே, தாய்மையுடன், நம் நாட்டிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும் பீடித் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கையை தயவுசெய்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கதிர் ஆனந்த் எம்.பேசினார்.